**செய்தி வெளியீடு எண்: 363** **நாள்.20.5.2008**

**பொது விநியோகத் திட்டத்திற்கு வழங்கப்படும் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு தாமதமில்லாமல் அரவை செய்து வழங்கப்பட வேண்டும்–**

**மாண்புமிகு உணவு அமைச்சர் திரு.எ.வ. வேலு அவர்கள் ஆணை**

சிறப்பு பொது விநியோகத் திட்டத்திற்கு செறிவூட்டப்பட்ட கோதுமை மாவினை அரைத்து வழங்கும் உருளைமாவு ஆலை உரிமையாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் உருளைமாவு சங்கச் செயலாளருடன் மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் தலைமைச் செயலகத்தில், இன்று 20.05.2008 மாலை 5.00 மணிக்கு ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். இந்த ஆய்வுக் கூட்டத்தில் உருளை மாவு ஆலை உரிமையாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் உருளைமாவு சங்கச் செயலாளர் ஆகியோர் பங்கு பெற்றனர்.

கூட்டத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் பேசுகையில் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு ஏழை, எளிய பாமர மக்களுக்கு இரும்புச் சத்து, போலிக் அமிலம், அயோடின் ஆகிய ஊட்டச் சத்தினை செறிவூட்டி அளித்து அவர்கள் ஆரோக்கியமயாக வாழ்வதற்கு இத்திட்டம் பேருதவியாக இருக்கும் என்றும், தமிழக அரசு மாதம் 2,500 மெ.டன் கோதுமையை அரைத்து, செறிவூட்டப்பட்டு, சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் மார்ச் 2008 முதல் பொது மக்களுக்கு வழங்குகிறது என்றும், ஒரு சில ஆலைகளில் தற்போது கோதுமையை எடுத்து அரைப்பதில் உள்ள காலதாமதத்தை தவிர்க்க வேண்டுமென அறிவுறுத்தினார். இத்திட்டத்தில், இதுவரையில் 4,424 மெ.டன் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு வழங்கப்பட்டுள்ளது. குறைந்த விலையில்,

அதாவது ஒரு கிலோ ரூ.11/- என்ற விலையில் செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடனும், சர்க்கரை நோயாளிகள் பயன் பெறத்தக்க வகையிலும் அரசு இத்திட்டத்தை செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

உருளைமாவு அரவையாளர்கள் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது முதல் வழங்கப்பட்ட கோதுமையை முழுமையாக அரவை செய்து வழங்கப்பட்டு, பொது விநியோகத் திட்டக் கடைகளுக்கு அனுப்பப்பட்டு விட்டதா என்பதை மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் விரிவாக ஆய்வு செய்தார்கள். காலதாமதமின்றி உடனுக்குடன் அரவை செய்து அனுப்பப்பட வேண்டும் என்று உருளைமாவு ஆலை உரிமையாளர்களுக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள். உருளைமாவு ஆலை உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள் ஒவ்வொரு மாதமும் ஒதுக்கீடு செய்யப்படும் கோதுமையை அந்த மாதம் 20–ம் தேதிக்குள் அரைத்து வழங்கி விடுவதாகவும், மேலும், இத்திட்டத்தை அரசு திறம்பட செயல்படுத்த அனைத்து ஒத்துழைப்பும் நல்குவதாகவும் உறுதிமொழி அளித்தார்கள்.

இக்கூட்டத்தில் கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் திரு.க. ராஜாராம், இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு. கே. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., உணவுபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இணை ஆணையாளர் திரு. உ. சகாயம், இ.ஆ.ப., தமிழ்நாடு உருளைஆலை உரிமையாளர்கள் / பிரதிநிதிகள் / சங்கச் செயலாளர் திரு. எஸ். நித்தியானந்தம் ஆகியோர் பங்கு பெற்றனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.